Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 1, Special Issue - 1, January 2022** **E-ISSN: 2583-0481**

# Life of Birds in Cho. Tharman's Novel *Sool*

**M. Haridevi,** Ph. D Scholar, Tamil Department, Government Arts College, Udumalpet-642126.
**ORCiD: https://orcid.org/0000-0002-9311-3965**
**DOI: 10.5281/zenodo.6623185**

## Abstract

*Tamil people lived as an example of how the human race should live amicably with other beings of the world. The legacy of the Tamil people and their precious era is still admired by all today. The ancient Tamil people were not only fond of their fellow human beings but also birds and animals. They were well acquainted with their life and other functions. They were also well versed in agricultural intelligence. Birds play a vital role in the life of human beings. They have life and without them, humans will lack the biological balance of the world. The purpose of this article is to explore the nature of science and the life of birds from the novel 'Sool' written by Cho.Tharman.*

**Keywords:** Sittukuruvi, Thukkananguruvi, Sakkurvi, Birds, Sool.

.

## References

[1] Cho.Dharman. *Sool*.
[2] M. Varatharasan. *Palamtamil Illakiyathil Iyarkai.*
[3] K.V.Balasubaramaniya. *Natrinaiurai.*
[3] K.V.Balasubaramaniyam. *Purananuru Urai.*
[4] E.Manikanar. *Ainkurunooru.*
[5] U.V.Shaminatha Iyer. *Kurunthokai Urai.*
[6] Thirunanasamatham. *Puraporul Venbamalai.*

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

# சோ.தர்மனின் சூல் நாவல் காட்டும் பறவைகளின் வாழ்வியல்

**மு.ஹரிதேவி,** முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லூரி, உடுமலைப்பேட்டை.
**ORCiD: https://orcid.org/0000-0002-9311-3965**
**DOI: 10.5281/zenodo.6623185**

**ஆய்வுச் சுருக்கம்**

*மனித இனம் எப்படி வாழ வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்த இனம் நம் தமிழ் இனம். விலைமதிப்பற்ற அவர்களின் மரபு சார்ந்த வாழ்வியல் கூறுகள் இன்றளவும் அனைவராலும் போற்றத்தக்கனவாக உள்ளன. பழந்தமிழர் சகமனிதர்-களோடு மட்டுமல்லாமல் பறவைகள், விலங்குகளோடு அன்பு பாராட்டுபவர்களாக விளங்கினர். அவைகளின் செயல்பாடுகளை நன்குணர்ந்திருந்தனர். மேலும் வேளாண்மை சார்ந்த நுண்ணறிவிலும் நன்கு தேர்ந்தவர்களாக விளங்கினர். பறவைகளின் சமிஞ்ஞைகளின் மூலம் நம் முன்னோர் அறிந்த இயற்கை அறிவியலையும் பறவைகளின் வாழ்வியலையும் சாகித்ய அகாதெமி விருது பெற்ற சோ.தர்மனின் சூல் நாவல் வழி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.*

**திறவுச்சொற்கள்:** சிட்டுக்குருவி, தூக்கனாங்குருவி, சாக்குருவி, பறவைகள், சூல்.

**முன்னுரை**

நம் முன்னோர்களில் மரபுசார்ந்த வாழ்வியல் கூறுகளை இன்றும் நாம் சில கிராமங்களில் காண முடிகிறது. கிராமங்களில் வாழும் மக்கள் பழந்தமிழர்களைப் போலவே இயற்கையின் சொல்லும் அறிய செய்திகளையும் பறவைகள் மற்றும் விலங்குகளின் சமிஞ்ஞைகள் போன்றவற்றின் மூலம் பின்னர் நிகழவிருக்கும் இயற்கை சார்ந்த நிகழ்வுகளை அனுபவப்பூர்வமாக உணரும் திறன் பெற்றவர்களாக விளங்குகின்றனர். பறவைகளின் நுண்ணறியும் திறனையும் நம் முன்னோர் பெற்றிருக்கும் வேளாண்மை சார்ந்த அனுபவ அறிவினையும் கிராமங்களில பின்பற்றப்படுகின்ற நிமித்தம் சார்ந்த நம்பிக்கைகளையும் இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.

**பறவைகளின் வாழ்வியல்**

பழந்தமிழர் நிலத்தில் வாழ்வன, நீரில் வாழ்வன, நிலத்திலும் நீரிலும் வாழ்வன, மரங்களில் வாழ்வன என பல்வேறு வாழ்விடங்களில் வாழும் உயிரினங்களை கூர்ந்து கவனித்துள்ளனர். பல்வேறு உயிரினங்கள் பற்றி அவர்கள் தந்துள்ள சொல்லோவியங்கள், பழந்தமிழ் இலக்கியங்களில் மிளிர்கின்றன. சங்ககாலப் புலவர்கள் ஐந்திணைகளிலும் வாழும் பறவைகளைப் பற்றியும் அவற்றின் வாழ்க்கை முறைகள் பற்றியும் அறிந்திருந்தனர் என்பதனை மு.வரதராசனார்

> **"சங்கப்புலவர்கள் இதற்கு விலக்கு அல்லர். அவர்கள் அமைந்துள்ள வருணனைகளில் பறவைகளின் பழக்கவழக்கங்கள், பறக்கும்முறை, கூடுகள், கூடுகள் கட்டுவதற்காக தேர்ந்து கொள்ளும் மரங்கள், குஞ்சுகளை காத்து வளர்க்கும்முறைகள் ஆகியவை எல்லாம் நன்கு விளக்கியுரைக்கப்படுகின்றன. இதனாற் பறவைகள் மனிதரின் அன்றாட வாழ்க்கையில்**

**தொடர்புடையவனாய் இருந்தன என்றும், புலவர்களின் உள்ளங்களில் சிறப்பான இடம் பெற்றிருந்தன என்றும் தெரிகிறது" (பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, ப.341)**

எனக் கூறி விளக்குகிறார்.

இதன்மூலம் சங்ககாலப் புலவர்கள் பறவைகளின் நுண்ணறியும் திறன், வாழ்விடங்களை தேர்வு செய்யும் உத்தி போன்றவற்றை நுண்ணிதின் உணர்ந்து தங்கள் பாடல்களில் பதிவு செய்துள்ளனர் என்பதனை உணர முடிகிறது. இன்றைய காலகட்டத்திலும் கிராமப்புறங்களில் மனித வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்புடைய பறவைகளைப் பற்றிய விரிவான செய்திகளை சோ.தர்மனின் நாவல்களில் காணமுடிகிறது.

**பறவைகளின் நுண்ணறிவு**

பறவைகளுக்கு இந்த உலகம் ஒரு தொடர் பயணம் செய்யும் வனமாகும். பறவைகள் பூமியின் வளங்களை அதிகரிக்கும் பணிகளை செய்கின்றன. அவை தம் எச்சங்கள் மூலம் இந்த பணிகளை மேற்கொள்கின்றன. பூமி செழிப்புடன் இருப்பதில் பறவைகளுக்கு பெரும் பங்கு உண்டு. இவ்வுலகில் மனிதன் மற்றும் பலதரப்பட்ட உயிரினங்கள் உருவாகும் முன்னே இந்த உலகத்தைச் சுற்றி வலம் வந்தவை இந்த பறவை இனங்கள். கொட்டும் பனியிலும் சுட்டெரிக்கும் வெயிலிலும் சுழன்று வீசும் காற்றையும் எதிர்த்து பயணிக்கும் திறன் பெற்றவை பறவைகள். அவைகளின் பார்வைகள் மிகத்திறன் கொண்டவை. மேலும் தாங்கள் பயணிக்கும் திசைகளை தன் நுகர்வுத் திறன் மூலம் அடையாளம் கண்டு கொள்கின்றன. இயற்கையின் சமநிலைப்பாட்டில் ஏற்படும் மாற்றங்களின் மூலம் நிகழவிருக்கும் விளைவுகளை முன்கூட்டியே உணர்ந்து தங்களுக்கு ஏற்படப்போகும் தீமைகளிலிருந்து முன்னெச்சரிக்கையாக தற்காத்துக் கொள்ளும் திறன் பெற்றிருக்கின்றன. குறிப்பிட்டு கூற வேண்டுமெனில் மழைக்காலங்களில் தனது இருப்பிடத்திற்கும் குஞ்சுகளுக்கும் எவ்விதமான இடையூறுகளும் ஏற்படாத வண்ணம் வாழ்விடங்களைத் தேர்ந்தெடுப்பதிலும் கூடுகள் அமைக்கும் கலையிலும் சிறப்பு பெற்று விளங்குகின்றன.

**தூக்கணாங் குருவிக்கூடு**

பறவைகளின் நடைமுறை பழக்கங்கள் மிக நுட்பமாகவும் விரிவாகவும் சூல் நாவலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. கூடு கட்டுதலில் தூக்கணாங்குருவிக்கு உள்ள திறமையை சங்க இலக்கியங்கள் பெரிதும் பாராட்டுகின்றன. இதனை,

**"முதுக் குறைக் குரிஇ முயன்று செய் குடம்பை**
**மூங்கில்அம் கழைத் தூங்க, ஒற்றும்" (நற்றிணை, பா.366)**

என்னும் நற்றிணை பாடல் வழியாகவும்,

**"முடங்கல் இறைய தூக்கணாங் குருஇ**
**நீடிரும் பெண்ணைத் தொடுத்த கூடு" (குறுந்தொகை, பா.374)**

என்னும் குறுந்தொகை பாடல் வழியாகவும் தூக்கணாங்குருவி மூங்கில், பனைமரம் போன்ற உயர்ந்த மரங்களின் உச்சியில் மிகப்பொருத்தமாக கூடுகளைக் கட்டும் என்னும் செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளது. *சூல்* நாவலின் ஆசிரியரான சோ.தர்மன் தூக்கணாங்குருவிகளின் கூடு கட்டுகின்ற அழகினை மட்டுமல்லாதது அவைகள் கூடுகளை அமைப்பதற்காக மரங்களை தேர்வு செய்யும் முறையினையும் கூடுகளில் வாயில்கள் அமைப்பதனைக் கொண்டு பின்னர் வரவிருக்கும மழையின்

தன்மையினை முன்பே அறிந்து கொள்ளும் குருவிகளின் நுண்ணறிவினையும் வாசகர்களுக்கு வெளிப்படுத்துகின்றார். இதை,

**"...தூக்கணாங் குருவிக்கூடுகளில் கீழ்ப்பக்கம் உள்ள வாசல் போக, பக்கவாட்டில் ஒவ்வொரு கூட்டிலும் ஒரு வாசல் இருக்கும். இந்தப் பக்கவாட்டு வாசல்கள் தெற்குப் பக்கம் பார்த்தபடி பெரும்பான்மையாக இருந்தால் அந்த வருசம் வடகிழக்கு பருவமழை அதாவது வடக்கத்தி மழை ஜாஸ்தி. பெரும்பான்மை கூடுகளின் வாசல்கள் வடக்குப் பக்கம் பார்த்தபடி இருந்தால் தெக்கத்தி மழை அதாவது தென்மேற்கு பருவமழை ஜாஸ்தி. இதுதான் முத்துவீரன் தாத்தா கணிப்பு" (சூல், ப.7)**

என பதிவு செய்கிறார்.

தூக்கணாங்குருவியின் நுண்ணறிவின் மூலம்அந்த ஆண்டு மழைப்பொழிவின் தன்மையினை உணர்ந்து கொண்டு பயிரிடுதலை மேற்கொள்ளும் கிராமிய விவசாய மக்களின் இயற்கை நுண்ணறிவு போற்றதலுக்குரியனவாகும். படைப்பாளி ஒரு நிகழ்வின் மூலம் ஐந்தறிவுடைய பறவைகளின் நுண் திறனையும் ஆறறிவு உடைய மனிதனின் நுண்திறனையும் வெளிப்படுத்துகிறார். மனிதர்களைக் காட்டிலும் நுண்மைத்திறனில் மேம்பட்டவை பறவையினங்கள் என்பதனை,

**"எந்தெந்த பனையில கூடுநெறையா கெட்டியிருக்கோ அதுக அம்புட்டும் ஆண் பனைக ஒன்னு ரெண்டு கூடுக தொங்குற பனைக அம்புட்டு பொட்டபனைக (சூல், ப.9)**

என்னும் உரையாடல் மூலம் கோடை காலங்களில் மட்டுமே மனிதர்களால் ஆண், பெண் பனைகளை அடையாளம் காணமுடியும். ஆனால் தூக்கணாங் குருவிகள் எல்லா காலகட்டத்திலும் ஆண், பெண் பனை வேறுபாடுகளை அறிந்து அதிக இடையூறுகள் இல்லாத ஆண் பனைகளில் கூடுகளை அமைக்கும் குருவிகளின் நுண்திறன் நோக்கத்தக்கது.

**சிட்டுக்குருவிகள்**

கண்மாயின் நடுவில் உள்ள மரங்களை வாழிடமாகக் கொண்டு வாழும் பறவைகள் மழைக்காலத்திற்கு முன்பாகவே மழையின் போக்கினை தனது நுண்திறன் மூலம் அறிந்து கொள்கின்ற தன்மையினை உடையது என்பதனை படைப்பாளி சூல் நாவலில் சில நிகழ்வுகள் மூலம் பதிவு செய்துள்ளார். கண்மாயில் உள்ள மரங்களில் வாழும் பறவையினங்கள் மரத்தின் உச்சிக் கொம்புகளில் கூடுகள் கட்டினால் அவ்வருடம் மழைப் பொழிவு அதிகமாக இருக்கும், கண்மாயும் நிறைந்து காணப்படும். அவ்வாறு இல்லாமல் மரங்களின் கிளைகளில் தாழ்வாகக் கூடுகள் கட்டினால் அவ்வருடம் மழைப்பொழிவு குறைவாக இருக்கும். கண்மாயில் நீர்த்தேக்கம் குறைந்தளவே இருக்குமென கிராமத்தில் வாழும் வேளாண் மக்கள் உணர்ந்து கொள்கின்றனர். அதற்கேற்றாற் போல பயிரிடும் திட்டத்தில் மாற்றங்கள் செய்து கொள்கின்றனர்.

**"... மரங்களின் தாடிக்கொம்புகளில் கூடுகள் நிறைய கட்டியிருந்தால் அந்த வருடம் மழை மத்துவம், கண்மாய் அரைப்பெருக்கு அல்லது முக்கால் பெருக்கு" (சூல், ப.8).**

**"... இந்த குருவிகளுக்கு இம்புட்டு அறிவு எப்படி வந்துச்சு, மனுசரவிட அறிவுல கூடியில்ல இருக்கு" (சூல், ப.8)**

என்ற உரையாடல் மூலம் தன் வாழ்விடத்திற்கு பின்னர் நிகழப்போகும் பாதிப்பினை முன்கூட்டியே அறிந்து கூடுகளை உயர அமைக்கும் பறவைகளின் நுண்ணறிவு வியக்கத்தக்கதாக உள்ளது. மழையின்

போக்கினை முன்னரே அறிந்து கொள்ளும் பறவைகளின் செயல்பாடுகள் விவசாயிகளுக்கு பேருதவியாக உள்ளன எனலாம்.

**நிமித்தம்**

பண்டைத் தமிழர்களின் வாழ்வியல் மரபுகளில் ஒன்றாகக் கருதப்படும் நிமித்தம் அல்லது சகுனம் பார்த்தல் என்பது இன்றும் தொன்றுதொட்டு வரும் வழக்கமாக உள்ளது. பழந்தமிழர் பின்பற்றிய பண்டைய நிமித்தங்களையும் அவற்றின்பால் அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கைகளையும் இலக்கண இலக்கியங்களின் வழியே நாம் அறிய முடிகிறது. தமிழ்மொழியின் பொருள் இலக்கணத்தை சிறப்புற விளக்கும் நூல் புறப்பொருள் வெண்பாமாலை. இந்நூல் புறத்திணைகளை பனிரெண்டாகக் காட்டுகிறது. அவற்றில் முதல் திணையாகச் சுட்டும் **வெட்சித் திணையில் பிள்ளை வழக்கு**என்னும் துறை பறவைகளின் நிமித்தம் பற்றிய செய்திகளை எடுத்துரைக்கிறது. இக்கருத்தினை பின்வரும் கொளுபாடல் விளக்குகிறது.

**"பொய்யாது புள்மொழிந்தார்க்கு**
**வையாது வழக்குரைத்தன்று" (புறப்பொருள் வெண்பாமாலை கொளு.18)**

அதாவது பிள்ளைவழக்கு என்னும் துறையானது வெட்சி மறவர் பகைவர் நாட்டிலிருந்து கவர்ந்து வந்த ஆநிரைகளை அனைவருக்கும் பகிர்ந்து அளிக்கும் போது, பிறருக்கு கொடுப்பதனைவிட பறவைகளின் ஒலியினை ஆராய்ந்து நன்னிமித்தம் கூறிய நிமித்திகருக்கு (குறி கூறுபவர்) ஒரு குடம் அளவு பால் கரக்கும் பசுக்களை மிகுதியாகக் கொடுத்து சிறப்பு செய்வதாகும். இதன்மூலம் நம்முன்னோர் பறவைகள் நிமித்தங்களை ஆராய்ந்து நற்செயல்களை மேற்கொண்டனர் என்னும் செய்தியையும் பறவைகளின் ஒலிகளை ஆராய்ந்து குறி கூறுபவர்கள் (நிமித்திகர்) மன்னர்களால் சிறப்பு செய்யப்பட்டனர் என்கின்ற செய்தியையும் அறிய முடிகிறது. *சூல்* நாவலானது கரிசல் வட்டார மக்களின் நம்பிக்கைகளையும் பழக்க வழக்கங்களையும் தெளிவாக விளக்கிக் கூறுகிறது. கரிசல் நில மக்களின் நம்பிக்கையில் நிமித்தங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன என்பதனை ஆழமாக பதிவு செய்துள்ளார். அவற்றில் பறவைகள் சார்ந்த நிமித்தக் குறியீடுகள் மிகுதியாக காணப்படுகின்றன. பறவைகளின் காட்சி, ஒலி, செயல்பாடுகள் போன்றவற்றை ஊகித்தறிந்து பின்னர் நிகழவிருக்கும் செயல்களை மக்கள் அறிந்து கொள்கின்றனர்.

**பறவைகள் நிமித்தம்**

நிமித்தங்கள் எதிர்கால நிகழ்ச்சிகளை முன்கூட்டியே அறிவிக்கும் அறிகுறிகளாக மக்களால் தொன்றுதொட்டு இன்றுவரை நம்பப்பட்டு வருகின்றன. தனக்கு நிகழவிருக்கின்ற தீமைகளை தீநிமித்தங்கள் மூலமாகவும் நன்மைகளை நன்னிமித்தங்கள் மூலமாகவும் அறிந்து கொள்கின்றனர். பறவைகள் ஒலிப்பதையும் பறப்பதையும் கொண்டு நிமித்தங்கள் எழுந்துள்ளன. தமிழர்களின் வரலாற்றுக் களஞ்சியமாக விளங்கும் புறநானூறு, **"புதுப்புள் வரினும் பழம்புள் போகினும் தீய நிமித்தம்" (புறம், பா.20)** என்ற பாடல் மூலம் பழங்காலத்தில் பின்பற்றப்பட்ட பறவைகள் சார்ந்த நிமித்த செய்திகளை எடுத்தியம்புகின்றது. மேற்கண்ட செய்தியின் மூலம் பழங்காலந்தொட்டே பறவை நிமித்தங்களை நம் முன்னோர் கடைபிடித்தனர் என்னும் கருத்தினை அறிய முடிகிறது. மேலும் ஒருவர் எந்தவொரு செயலையும் தொடங்குவதற்கு முன்பு இன்னஇன்ன பறவைகள் எதிரில் வந்தால் இன்னஇன்ன நிமித்தம் என்று நம் முன்னோர் குறிப்பிட்டுள்ளனர்.

பண்டைத்தமிழர் வாழ்வியலோடு நெருங்கிய தொடர்பு கொண்டு விளங்குகின்ற கிராமங்களில் பின்பற்றப்படுகின்ற பறவைகள் சார்ந்த நிமித்தங்களை சோ.தர்மனின் சூல் நாவல்

வெளிப்படுத்துகின்றது. சூல் நாவலில் சில பறவைகளின் செயல்பாடுகள் நன்னிமித்தங்களின் அறிகுறிகளாகவும் தீநிமித்தங்களின் அறிகுறிகளாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

**சா குருவியின் சத்தம்**

சா குருவி கத்தினால் ஏதேனும் இறப்பு ஏற்படும் என கரிசல்நில மக்கள் நம்புகின்றனர்.

**"மனுசரு என்னடா மனுசரு, பெரிய மனுசரு நாளைக்கு ஒரு உசுரு சாகப் போகுதுனு சா குருவி ஒரே சத்தத்துல சொல்லிட்டு அதுபாட்டுல பறந்து போயிருது...... நம்மலால நிம்மதியா இருக்க முடியுமா?" (சூல், ப.8)**

என்று சோ.தர்மன் கூறுவதன் மூலம் சா குருவியின் ஒலியை மக்கள் தீநிமித்தமாக கருதுவது நோக்கத்தக்கது.

**காகம் கூறும் நிமித்தம்**

காகம் வீட்டின் கூரையில் கத்தினால் உறவினர் வருகை உறுதி என்பது அனைவரும் அறிந்ததே.

**"பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை**
**வரிவெண் தாலி வலைசெத்து வெரூஉம்" (ஐங்குறுநூறு, பா.166)**

என காக்கையின் சிறப்பினை ஐங்குறுநூறு கூறுகிறது. சூல் நாவல் காகம் உச்சந்தலையில் எச்சமிடுவது தீநிமித்தம் எனக் குறிப்பிடுகிறது. காகம் தலையில் எச்சமிட்டால் அந்நபருக்கு ஏதேனும் ஒரு வகையில் தீமை நிகழும் என மக்கள் நம்புகின்றனர். *சூல்* நாவலில் மகாலிங்கம்பிள்ளை என்பவர் வெற்றிலை பயிரிடுதலில் சிறந்து விளங்கும் பெரிய நாடாரிடம் தானும் வெற்றிலை வேளாண்மை செய்பவர்தான் என்பதனை மறைத்து வெற்றிலை பயிரிடுதலில் கடைபிடிக்கும் சில நுணுக்கமான உத்திகளை அறிந்து கொள்கிறார். பொய் கூறி பெரிய நாடாரிடம் தான் கற்ற உத்திகளை தன் விளைநிலத்தில் பயன்படுத்த தொடங்கும் போது காகம் மகாலிங்கம் பிள்ளையின் தலையில் எச்சமிட்டு செல்கிறது. காகம் எச்சமிட்ட ஒருசில நாட்களில் வெற்றிலை விளைச்சலுக்காக மகாலிங்கம்பிள்ளை வெட்டிய கிணற்றிலேயே தவறி விழுந்து மண்டை உடைந்து இறந்துவிடுகிறார். இந்நிகழ்வில் மகாலிங்கம் பிள்ளைக்கு பின்னர் நிகழவிருக்கும் தீமையினை முன்பே காகம் சுட்டி சொல்லவே காகம் தலையில் எச்சமிட்டதாக மக்கள் கருதினர் என்பதனை,

**"... உச்சந்தலையில் பட்ட பறவை எச்சத்தை உள்ளங்கையால் துடைக்க மட்டும்தான் முடியும். நொடிப்பொழுதில் காற்றில் பரவ விட்டுவிட்டு பரந்தோடிவிட்ட பறவை சொன்ன சேதியை யார் அறிவார்?" (சூல், பக்.114-115)**

எனும் பகுதி குறிப்பிடுகின்றது. இதன்மூலம் பறவைகள் எச்சமிடுவது தீநிமித்தமாக கருதப்படுகிறது என்னும் செய்தி புலப்படுகின்றது.

**நாமக்கோழியின் வருகை**

கோழி வகைகளில் ஒன்று நாமக்கோழி. **"நீர்க்கோழி நீலநிறத்தையுடையதென தனியே குறிக்கப்படுகிறது" (பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, ப.345)** என மு.வரதராசனார் நீர்க்கோழி பற்றி குறிப்பிடும் செய்தி சோ.தர்மன் கூறும் நாமக்கோழி பற்றிய செய்திகளுடன் பொருந்திச் செல்வதைக் காண முடிகிறது. **"நீருறை கோழி நீலச் சேவல்" (ஐங்குறுநூறு, பா.51)** என ஐங்குறுநூறு நீலச்சேவல் வகையினைக் கூறுகின்றது. கரிசல் நிலமக்கள் கண்மாயில் நாமக்கோழியைக் கண்டால் அந்த வருடம் மழை பொழிந்து கண்மாய் பெருகி பயிர்கள் நல்ல விளைச்சலைத் தரும். கிராமம் செழிப்பாக இருக்கும்

என நம்பினர். நாமக்கோழியை முதலில் பார்த்து ஊர்மக்களுக்கு தெரிவிக்கும் நபருக்கு கண்மாயைக் காவல் காக்கும் நீர்ப்பாய்ச்சியால் புதுவேட்டி, துண்டு கொடுத்து சிறப்பு செய்வது வழக்கம். அந்த வகையில் இவ்வருடம் நாமக்கோழியை முதலில் கண்ட சங்கிலி என்பவர் நீர்ப்பாய்ச்சியால் சிறப்பு செய்யப்பட்டார் எனும் செய்தி படைப்பாளியால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

> **”மழைக் காலத்தில் மட்டுமே அபூர்வமாகக் காணப்படும் நாமக்கோழி சாமான்யமாக யாருடைய கண்ணிலும் தட்டுப்படாது. எல்லா கிராம சம்சாரிகளும் நாமக்கோழியைக் காண காத்திருப்பார்கள். ஏகதேசம் ஒன்றிரண்டு பேர் கண்களில் தட்டுப்படும். இந்த வருடம் முதலிலேயே தட்டுப்பட்டுவிட்டதால் சம்சாரிகளுக்கு சந்தோஷம் பிடிபடவில்லை. வெள்ளாமைகள் வீடு நிறைந்தது மாதிரிதான்”15 (சூல், ப.67)**

என கிராம மக்கள் மகிழ்கின்றனர். இதன்மூலம் நாமக்கோழியின் வருகை நன்னிமித்தமாக மக்களால் கருதப்படுவது எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**தொகுப்புரை**

மழையின் வரவினை முன்பே உணரும் திறன் பெற்ற பறவைகளின் கூடுகட்டும் திறன், கூடுகட்ட தேர்வு செய்யும் மரம், வாயில்கள்அமைப்பு போன்றவற்றின் மூலம் பறவைகளின் நுண்திறனும் அவ்வகை நுண்திறனால் மனிதர்கள் அடையும் நற்பயன்களும் இக்கட்டுரையின் மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளன. பறவைகளின் செயல்பாடுகளை உற்று நோக்கி அவை வேளாண்மைக்கு மனிதர்களுக்கு தரும் சிறு குறிப்புகளை கணித்து செயல்படும் வேளாண் மாந்தரின் அனுபவ அறிவு நோக்கத்தக்கது. பண்டைக் காலந்தொட்டு தமிழர்கள் பின்பற்றி வரும் நிமித்தம் பற்றிய நம்பிக்கைகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. சாகுருவி ஒலி எழுப்புதல், காக்கை உச்சந்தலையில் எச்சமிடுதல் போன்றன தீய நிமித்தமாகவும் நாமக்கோழியின் வருகை நன்னமித்தமாகவும் கருதப்படுகிறது. மனித வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்புடைய பறவைகளின் நுண்ணறிவுத்திறனை படம்பிடித்துக் காட்டுவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**துணை நூற்பட்டியல்**

[1] தர்மன், சோ. *சூல்.* அடையாளம், புத்தாநத்தம், 2016.

[2] வரதராசன். மு. *இலக்கியத்தில் இயற்கை.* பாரி நிலையம், சென்னை – 108, 2018.

[3] பாலசுப்பிரமணியம், கு.வெ. *நற்றிணை.* (உரை.ஆ) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.

[4] பாலசுப்பிரமணியம், கு.வெ. *புறநானூறு.* (உரை.ஆ) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.

[5] சாமிநாத அய்யர், உ.வே. *குறுந்தொகை.* (உரை.ஆ) உ.வே.சா.நூல் நிலையம், சென்னை, 2009.

[6] மாணிக்கனார்.இ. (உரை.ஆ) *ஐங்குறுநூறு.* வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 2009.

[7] திருஞானசம்பந்தம். (உரை.ஆ) *புறப்பொருள்.* வெண்பாமாலை, கதிர்பதிப்பகம், திருவையாறு, 2006.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.